This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# எதையும் ஒரு முறை

## 1

நான்கு நாட்களாக மழை பெய்து இன்றுதான் சூரியன். இன்னமும் வானத்தில் மழையின் ஆயத்தங்கள். மேகங்கள் கர்ப்பம் தரித்து இப்பவோ அப்பவோ என்று இருந்தன. காற்றில் குளிர் இருந்தது. சட்டக் கல்லூரியில் கணேஷ் கிரிமினாலஜி பற்றிய சொற்பொழிவை முடித்துவிட்டு எதிர்கால லாயர்களை நோக்கிச் சிரித்துவிட்டு”எனி கொஸ்சன்ஸ்” என்றான். வஸந்த் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த பெண்களை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். இவர்களா பிற்காலத்தில் வக்கீல்களாக வரப் போகிறார்கள்? இதோ லேசான ரோஜா போல இவள் என்னத்தை கோர்ட்டுக்கு வந்து வாதாடி, பழைய கழுகுகளைப் போன்ற லாயர்களை எதிர்த்துச் சமாளித்து... பார்த்தாலே பலமாக ஊதினால் ஒடிந்து விழுந்து விடுவாள் போல இருக்கிறாளே, அந்தப் பெண்தான் எழுந்து கணேஷை முதல் கேள்வி கேட்டாள்.

“மிஸ்டர் கணேஷ்! சீஸர் பெச்சாரியாவைப் பற்றிப் பேசினீர்கள். அவர் சித்தாந்தங்களைப் பற்றிச் சற்று விவரமாகச் சொல்ல முடியுமா? ”

வஸந்த் ‘இத பார்றா’ என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். அவள் குரல் தீர்மானமானதாக இருந்தது. ஒருமுறை வஸந்தைப் பெருமையாகப் பார்த்துத் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

“சீஸர் பெச்சாரியா ஒரு மகத்தான இத்தாலிய ஜூரிஸ்ட். 1764இல் குற்றங்களும் தண்டனைகளும் என்று ஒரு நூல் எழுதினார். பெச்சாரியாவை கிளாஸிக்கல் கிரிமினாலஜிஸ்ட் வகையில் சேர்க்கலாம். அவருடைய முக்கியமான சித்தாந்தங்கள்– “எல்லா சமூகச் செயல்களுக்கும் அடிப்படை சமூகத்தில் மிக அதிக பட்சமானவர்களுக்கு மிக அதிக சந்தோஷம் தரக்கூடியதாக இருக்க வேண்டும்”.

“சமூகத்துக்கு தீங்கிழைப்பவை அத்தனையும் குற்றங்களே. ஒரு குற்றத்தின் தீவிரம் அது எவ்வளவு தூரம் சமூகத்திற்குத் தீங்கிழைக்கிறது என்பதைப் பொறுத்தது.”

“குற்றங்களைத் தடுப்பது குற்றங்களை தண்டிப்பதை விட முக்கியம்.”

“அப்ப, சமூகத்துக்கு தீங்கிழைச்சாத்தான் அதைக் குற்றம்னு சொல்றீங்களா ?”

“அவர் சொல்றார்!”

“நீங்க என்ன சொல்றீங்க? ”

“என்னைப் பொறுத்தவரை ஒரு குற்றத்துக்கு உள் நோக்கம், இன்டென்ஷன், முக்கியம்னு நினைக்கிறேன்.”